பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

37 ] சென்னை—ஞாயிறு, டிசம்பர் 22, 1946. [ விலை. அணா. 2

## வால்மீகியின் வெற்றி

சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் மகா மகோ உபாத்தியாய ஹரிஹர சாஸ்திரி என்னும் வங்காளப் புலவர் "வால்மீகி வெற்றி" என்னும் அழகான நாவல் ஒன்றை பிரசுரம் செய்தார். அது மராத்தி பாஷையிலும் குஜராத்தி பாஷையிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. வேறு சில இந்திய பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகிறேன். இப்போழுதும் அதைப் படிக்க ஆனந்தமாக இருக்கிறது. அந்தக் கதையானது பண்டைக் காலத்தில் இந்தியர்விலிருந்த பிராமணர் வருப்பாருடைய தலைவராகிய வசிஷ்டருக்கும் க்ஷத்திரிய வகுப்பாரின் தலைவராகிய விசுவாமித்திரருக்கும் இடையில் நடந்த சண்டை சச்சரவுகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் ஆரியர்கள் வசித்து வந்த பிரதேசத்தை யார் ஆள்வது என்பதுபற்றிய சண்டையே அது. தேசமென்று சொல்லாமல் அது காமதேனு அதாவது விருப்பத்தை நிறைவேற்றும் பசு என்று சொல்லப்பட்டிருக்கிறது. சண்டையானது இரண்டு வகுப்பார்களுக்கு மிடையிலும் பலதலைமுறையாக நடந்து வந்தது. முதலில் வசிஷ்டர் தோல்வியுற்ருர். அவருடைய மூன்று குமாரர்களும் கொல்லப்பட்டார்கள். அவருடைய பசுவை விசுவாமித்திரர் பலாத்காரமாகப் பறித்துக் கொண்டார். ஆனல் அந்த வெற்றி நீடித்திருக்கவில்லை. வசிஷ்டர் மறுபடியும் படை திரட்டிக்கொண்டு போய் விசுவாமித்திரரைத் தலை தூக்க முடியாதபடி முறியடித்தார். விசுவாமித்திரர் பல வருஷங்கள் இமயமலையில் போய் தங்க வேண்டியவரானர். மற்ற க்ஷத்திரியர்கள் தனித்தனியாக இருந்த பார்ப்பனச்சேரிகளைத் தாக்கவும் அவர்களைக் கொல்லவும் அவர்களுடைய ஆசிரமங்களை அழிக்கவும் செய்து வந்தார்கள். அந்த மாதிரி கஷ்டப்பட்ட பிராமண குடும்பங்களில் ஒன்று, கோடரியை கையிலேந்திய ராமன் என்று பொருள்படும் பரசுராமன் என்னும் மகா கோபிஷ்டனுடைய குடும்பமாகும். க்ஷத்திரியர்கள் அவர்களுடைய தந்தையையும் சகோதரர்களையும் கொன்று விட்டபடியால் அவருக்குக் கோபம் பொங்கிவிட்டது. க்ஷத்திரிய வம்சத்தை நிர்மூலம் செய்து விடுவதாக சபதம் செய்தார். 21 முறை அவர்களைத் தோற்கடித்தார். ஒவ்வொரு தடவையிலும் க்ஷத்திரியர்களை இரக்கமில்லாமல் கூட்டங் கூட்டமாகக் கொலை செய்தார். க்ஷத்திரியர்கள் அடங்கி ஒடுங்கிப் போனர்கள். க்ஷத்திரிய வம்சம் என்று ஒன்று இல்லையோ என்று எண்ணும்படியாக ஆகிவிட்டது. வசிஷ்டரும் அவருடைய பரிவாரத்தாரும் இந்தவிதமாக ஏற்பட வேண்டுமென்று எண்ணியது கிடையாது. ஆனல் நிலைமை அத்து மீறிப் போய்விட்டது. பரசுராமன் பழி வாங்கும் கொலைக்காரியங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு எந்தவிதமான வழியும் தோன்றவில்லை. எல்லோரும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனல் திடீரென்று எதிர்பாராத விதத்தில் வால்மீகி என்னும் ஒரு சாந்த புருஷர் தோன்றினர். அவர் ஒரு தாழ்ந்த பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். ஆனல் கவிதையிலும் இசையிலும் மகா சாமர்த்தியமுடையவராக இருந்தார். அதைவிட அதிகமாக இருந்தது அவருக்குத் தம்முடைய கொள்கையிடமிருந்த பக்தி. சகோதரர்கள் இப்படிச் சண்டையிடுவதைக் காண அவருடைய மனம் பொறுக்கவில்லை. பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் இடையில் சமாதானம் உண்டாகும்வரை தாமும் சும்மா இருக்கப் போவதில்லை என்று தீர்மானம் செய்தார். அவரிடத்தில் சங்கீதக் கருவியைத் தவிர வேறு ஆயுதம் கிடையாது. "நாம் எல்லோரும் ஒன்று" என்னும் பல்லவியையே திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டிருந்தார். தமக்குத் துணையாகச் சில இசைவாணர்களைச் சேர்த்துக் கொண்டு பிராமணச் சேரிகளுக்கும் க்ஷத்திரிய சேரிகளுக்கும் சென்று ஒற்றுமை, சமாதானம், அன்பு என்னும் தம்முடைய உபதேசத்தைப் போதித்து வந்தார். அவருடைய பாடல்களும் சங்கீதமும் கேட்போர் மனதை உருக்கி விட்டன. எங்கு பார்த்தாலும் ஒற்றுமை உண்டாக வேண்டுமென்ற ஆசை எழுந்தது. வசிஷ்டரும் விசுவாமித்திரரும் சமாதானம் செய்துகொண்டார்கள். பரசுராமரும் க்ஷத்திரியரை அழிக்க வேண்டுமென்கிற கோஷம் இனி பயன்படாது என்று கண்டு கொண்டார். வசிஷ்டரும் விசுவாமித்திரரும் அயோத்தியிலும் மிதிலையிலும் அரசாண்டு கொண்டிருந்த க்ஷத்திரிய வம்சங்களை ஆதரித்தார்கள். பரசுரர்மர் விலகிக்கொண்டார். இந்த விதமாக நாட்டில் சமாதானம் நிலைநாட்டப்பட்டு விட்டதால் ஜனங்கள் வால்மீகியை ராமாயண சரித்திரத்தைப் பாடித் தரும்படியாக வேண்டிக் கொண்டார்கள். அதன் மூலம் பிராமண க்ஷத்திரியர் உறவு பலப்படுமென்றும் ஆரியர்கள் அதன் காரணமாக முன்னேற முடியுமென்றும் எண்ணினர்கள்.

இதேபோல் ஹிந்துக்களுக்கும் மூஸ்லிம்களுக்கும் இடையில் வால்மீகி கண்டு பிடித்த "நாம் எல்லோரும் ஒன்று" என்னும் மந்திரத்தை உபயோகிக்க வேண்டும், அதற்கான பஜனை சங்கங்களும் ஏற்படுத்த வேண்டும். அவைதான் இறுதியாக வெற்றியளிக்கும்.

கே. ஜி. எம்.

## அட்டூழியத்திற்குச் சாஸ்திர ஆதாரம்

மனிதன் தன்னுடைய அக்கிரமங்களுக்கும், தான் பிறரைச் செய்யும்படி தூண்டும் அக்கிரமங்களுக்கும் சமய சாஸ்திரங்களிலிருந்து ஆதாரம் தேடப் புறப்படுவானனல் மதங்களும் மதநூல்களும் ஏற்படாமல் இருந்திருக்கக் கூடாதா என்ற எண்ணம் உண்டாகிறது.

மனிதன் ஒரு அக்கிரமத்தைச் செய்ய விரும்புகிறான். அவனுடைய அறிவு அதைத் தவறென்று தெளிவாகக் காட்டுகிறது. ஆனால் செய்ய வேணுமென்ற ஆசை அதிகப்பட்டுவிடுகிறது. உடனே அதற்காக தனக்கு ஆதாரமாக மத நூல்களை காட்ட ஆரம்பிக்கிறான். அப்படி தன்னை ஏமாற்றிக்கொள்வது போலவே பிறரையும் ஏமாற்ற ஆரம்பித்து விடுகிறான்

ஒரு நிருபர் கேட்டுள்ள இரண்டு கேள்விகள் இந்த எண்ணங்களை என்னுடைய மனத்தில் எழுப்பின. அந்தக் கேள்விகள் வருமாறு :—

(1) "மகா பாரதயுத்தத்தை தரும யுத்தமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அது சகோதரர்கள் செய்து கொண்ட யுத்தம் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் காலத்தில் உள் நாட்டு யுத்தம் என்று சொல்லுகிறோமே அதுதானே அது. அத்தகைய யுத்தத்தை தரும யுத்தம் என்று சொல்லலாமா? அது தரும யுத்தமென்று சொன்னால் இப்பொழுது நடக்கும் வகுப்பு வாதக் கலகங்களையும் தருமயுத்தம் என்று சொல்லலாமல்லவா? ஒரு வகுப்பார் அநியாயமாகக் கேட்டுக் கொண்டிருந்தால் அவற்றை எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொல்வது நியாயமாகுமா? அவர்கள் அதற்காக அக்கிரமம் செய்தால் அதை எதிர்த்துச் சண்டையிடுவது தரும யுத்தமேயல்லவா?

(2) மகா பாரத யுத்தகாலத்தில் கிருஷ்ணபகவான் ஆயுதங்களைத் தொடுவதில்லை என்று சபதம் செய்திருந்தார். அப்படி இருந்தும் நெருக்கடி ஏற்பட்ட சமயத்தில் பீஷ்மரைக் கொல்வதற்காக சுதர்சன சக்ராயுதத்தைக் கையிலெடுத்தார். அது போல் மகாத்மா காந்தியடிகளும் கொஞ்ச காலத்திற்கு ஹிம்சையை நடக்கும்படி விட்டுவிட வேண்டாமா?"

பதில் :—

எந்த விஷயத்தையும் பகுத்தறிவைக்கொண்டு நன்றாக அலசி ஆராய்ந்த பிறகுதான் சரித்திரத்திலோ சமய சாஸ்திரத்திலோ ஆதாரம் தேட புறப்படவேண்டும். நாம் பாகிஸ்தான் வேண்டுமா? வேண்டாமா? என்ற விஷயத்தை விட்டு விட்டு இப்பொழுது நடக்கும் கலகங்கள் மனிதப் பண்பாட்டுக்கு ஒத்தனவா என்பதை மட்டும் காய்தல் உவத்தலின்றி ஆராய்வோம். கல்கத்தாவிலும் கிழக்கு வங்காளத்திலும் பீஹாரிலும் நடைபெற்ற கொலைகளும், தீ வைத்தலும் இவற்றிலும் கொடியதான அக்கிரமங்களும் இன்னும் பல நகரங்களில் நடந்துகொண்டிருக்கும் குத்து வெட்டுக்களும் சரியான ஒழுக்கத்தின் பால் சேர்ந்தனவா? நம்முடைய உயர்ந்த மனித அம்சம் இந்த மிருகத் தன்மையை சம்மதிக்குமா? முஸ்லிம்கள் ஹிந்துகளைக் கண்டாலும் ஹிந்துக்கள் முஸ்லிம்களைக் கண்டாலும் ரத்த வெறி கொண்டு தாக்குவதும் பெண்களைக் கற்பழிப்பதும் குழந்தைகளைக் கொல்லுவதும் பிறகு இந்தப்பேய்க் காரியங்களுக்கு ஆதாரமாக சமய சாஸ்திரங்களிலிருந்து மேற் கோள்கள் கூறப் புறப்படுவதும் வெறும் பைத்தியக்காரத்தனம் தானே? நோவா காளியில் பட்டினி கிடக்கும் ஏழைக் குடியானவர்களும் நாம சூத்திரர்களும் பீஹாரிலுள்ள முஸ்லிம் குடியானவர்களும் கொலாபாவிலுள்ள மீன் பிடிப்பவர்களும் பாகிஸ்தானைப் பற்றியோ ஹிந்துஸ்தானைப் பற்றியோ என்ன அறிவார்கள்? அவர்கள் ஏன் ஒருவரையொருவர் கொல்லவும் மான பங்கப் படுத்தவும் கொள்ளை இடவும் வேண்டும்? ஹிந்துவோ முஸ்லிமோ தெருவில் நடந்து போகும் பொழுது திடீரென்று முதுகில் குத்தப்படுவதற்கு என்ன குற்றம் செய்தார்?

இன்று மனிதனுடைய ஹிருதயத்திலிருந்து சண்டையிடும் ஆசையும் அவற்றுடன் சேர்ந்த இதர துர் ஆசைகளும் ஒழிந்துவிடவில்லை. அதனால்தான் அது ஏதேனும் ஒரு சாக்கை வைத்துக்கொண்டு திடீர் திடீரென்று கொழுந்து விட்டெரிய ஆரம்பித்து விடுகிறது. அப்பொழுது செல்வாக்குள்ள சிலர் அதற்கு நெய் ஊற்றி வளர்க்கிறார்கள். அதன் பின் லக்ஷக் கணக்கான நிரபராதிகள் கொல்லப்படுகிறார்கள். கோடிக்கணக்கான பணம் பெறக்கூடிய சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன. ஜன சமூகம் முழுவதும் சொல்லமுடியாத துயரங்களுக்கு ஆளாகின்றது. கள்ளங் கபடமற்ற ஜனங்களை இந்த கொடியவலையில் சிக்க வைப்பதற்காக விசித்திரமான நியாயங்கள் கூறப்படுகின்றன. அவைகளில் ஒன்று "மதத்துக்கபாயம்" என்பதாகும். அதைக் கேட்டதும் மந்திர சக்தியால் பீடிக்கப்பட்டது போல் அதுவரை சாந்தமாயிருந்த ஜனங்கள் காட்டு மிருகங்களைவிடக் கொடிய மத வைராக்கியப் பேய்கள் போல் ஆகி விடுகிறார்கள்.

ஜனங்களைப் பார்த்து, "நீங்கள் மிருகங்கள். மிருகங்களைப்போல் நடவுங்கள்" என்று சொன்னால் யாரும் அப்படிச் செய்யமாட்டார்கள். ஆனால் அதற்குப் பதிலாக, அவர்களிடம் "இந்த மாதிரி கொல்லும்படி கடவுள் ஆணையிடுகிறார். வேத சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. இது உன்னதமான தியாகம். கடவுளுக்கு உகந்த சேவை. புண்ணிய கைங்கரியம். கடவுள் அருளைப் பெறுவதற்கேற்ற வழி. கொல்பவருக்கும் கொல்லப்படுபவர்க்கும் நன்மை. கொல்லப்பட்டால் மோக்ஷம். கொன்றால் மோக்ஷத்திற்கு அனுப்புகிறோம். இந்த தர்ம யுத்தத்தில் சேராவிட்டால் மதமும் பண்பாடும் அழிந்து போகும்" என்று சொன்னால் அப்பொழுது ஜனங்கள் இந்த மதவெறி என்னும் மதுபானத்தை உண்டு பைத்தியம் பிடித்தவர்களாகி மிருகத்தினும் கேடுகெட்ட மிருகங்களாக ஆகிவிடுகின்றனர்.

இனி நிருபருடைய கேள்விகளைக் கவனிப்போம். இப்பொழுது நாட்டில் நடக்கும் கலகங்களை மகா பாரத யுத்தத்தோடு ஒப்பிடுவதற்கு எந்தவிதத்திலும் பொருத்தமில்லை. இரண்டு அரச குடும்பத்தார் ராஜ்யம் சம்பந்தமாக சண்டையிட்டுக் கொண்டார்கள். ஆகவே அது ஒரு குடும்ப சமாசாரம். யுத்தமும் அந்தக் காலத்தில் ஏற்பட்டிருந்த விதிகளை அனுசரித்தே நடந்தது. யுத்தப் பிரகடனம் செய்தபின் இருதரத்தாரும் யுத்த களத்தில் தத்தம் சேனைகளைக் கொண்டுவந்து நிறுத்தி வெற்றி தோல்வி காணும் வரைப் போர் செய்தார்கள். இருதரத்தாரும் எல்லோரும் ஒப்புக்கொண்ட யுத்த முறையை அனுசரித்தே போர் புரிந்தார்கள். யுத்தத்தில் கலந்தவர்களைத் தவிர மற்றவர்கள் யாருக்கும் கேடு உண்டாகவில்லை. அதனாலேயே அத்தகைய யுத்தங்களை தர்ம யுத்தங்கள் என்று சொல்வது வழக்கம்.

இப்பொழுது நடைபெறும் கொலைகளையும் கொள்ளைகளையும் மானபங்கங்களையும் மதமாற்றங்களையும் இந்த விதமாக தர்மமானவை என்று கூற முடியாது. ஒரு வகுப்பைச் சேர்ந்த ஒரு பெரிய கூட்டத்தார் திடீரென்று அடுத்த வகுப்பின் ஒரு சிறு கூட்டத்தாரையோ அல்லது தனியாகச் செல்லும் ஒருவனையோ தாக்கி முற்றிலும் நிரபராதியாக உள்ளவர்களைக் கொன்று விடுகிறார்கள். தாக்குகிறவர்களில் எவனும் வீரனில்லை. தாக்கப்படுகிறவர்களில் யாரும் குற்றவாளியில்லை. யுத்தத்தை நடத்தும் சேனாதிபதியும் கிடையாது. அயோக்கியர்கள்தான் திரை மறைவில் இருந்துகொண்டு இத்தகைய துர்க்கிருத்தியங்களைச் செய்யும்படி தூண்டுகிறார்கள். பணத்தைக் கொடுத்து போக்கிரிகளை ஏவி விடுகிறார்கள். அவர்கள் இரக்கமற்ற சமூக விரோதிகள். அவர்களில் சிலர் பெரிய மனிதர்களாயிருக்கலாம். ஆயினும் அவர்கள் சமூகத்திற்கு நன்மை தேடுகிறவர்கள் அல்லர். தங்கள் நலத்தைத் தேடுவதற்

அபாயம் என்று அஞ்சினால் முன்னேற்றம் கிடையாது—கால்ஸ் வொர்த்தி

காக மனித உருவத்தில் நடமாடும் பேய்களே யாவர். அவர்களுக்கும் மதத்திற்கும் அணுவளவும் சம்பந்தம் கிடையாது.

இப்பொழுது நடைபெறும் கலகங்களை பண்டைக் கால சம்பவங்கள் எதனுடனாவது ஒப்பிட்டுப்பார்க்க விரும்பினால் கௌரவர்கள் கக்ஷியில் எஞ்சியிருந்த அசுவத்தாமனும் கிருபாச்சாரியரும் நடுநிசியில் பாண்டவர்களின் பாசறைக்குள் புகுந்து பாண்டவர்களுடைய மக்களும் மற்றவர்களும் தூங்கிக்கொண்டிருந்த பொழுது அவர்களை அப்படியே எழுப்பாமல் கொலை செய்தார்களே அதனுடன்தான் ஒப்பிடலாம். துவாரகையில் யாதவர்கள் சகோதரர்களாயிருந்தும் சண்டையிட்டுக் கொண்டார்களே அதனுடனும் ஒப்பிடலாம்.

நெருக்கடியான சமயத்தில் கிருஷ்ண பகவான் தாம் எடுத்துக்கொண்ட சபதத்தை மீறி சுதர்சன சக்கராயுதத்தை கையாண்டதைப்பற்றி நிருபர் எழுதுகிறார். கிருஷ்ண பகவானே அப்படிச் செய்தால் காந்தியடிகள் ஏன் செய்யக்கூடாது? இந்தக் கஷ்டமான நிலையைச் சமாளிப்பதற்காக அவர் அஹிம்சையை விட்டுவிட்டு ஹிம்சையைக் கையாண்டால் என்ன? ஹிம்சையைக் கையாள அவருக்குத் திறமை யில்லாவிட்டால் அவர் வேறொருவரைக் கையாளும்படி சொன்னாலென்ன? என்று நிருபர் கேட்கிறார்.

இந்தக் கேள்விக்குப் பதில் கூறுவதற்காக மற்றொரு கேள்வியைக் கேட்கலாம். காந்தியடிகள் தம்முடைய சிறு பிராயத்தில் தகப்பனாருக்குத் தெரியாமல் களவு செய்யவும் பீடி குடிக்கவும் ஆரம்பித்தார். இந்த விஷயத்தை படித்த வுடன் இந்த நிருபருடைய மகன் அவரிடம் போய் “மகாத்மா காந்தி இப்படிச் செய்திருக்கும் பொழுது நானும் அப்படிச் செய்தால் என்ன? நான் மகாத்மாகூட ஆகப்போவதில்லையே” என்று கேட்டால் நிருபர் என்ன கூறுவார்? சபதத்தை மீறியது உண்மையானால் கிருஷ்ணபகவானும் கூட எவ்வளவு பெரியவரா யிருந்தபோதிலும் தவறு செய்யக்கூடிய மனிதரே என்பதைத்தான் அது காட்டுகிறது. அதனால்தான் அவர் செய்த தவறை பீஷ்மர் எடுத்துக் காட்டியதாகவும் அவர் சிஷ்யனான அர்சுனன் அதை தடுத்ததாகவும் மஹாபாரதம் கூறுகின்றது.

பழைய சர்வகலாசாலைகளில் பட்டதாரிகளுக்குப் பிரசங்கிக்கும்பொழுது “நீங்கள் உங்கள் ஆசிரியர்கள் வாழ்க்கையில் காணப்படும் நல்ல விஷயங்களைப் பின்பற்ற வேண்டுமேயன்றி தீய விஷயங்களைப் பின்பற்றக்கூடாது” என்று புத்திமதி கூறுவது வழக்கம். இந்த வகுப்புவாத விஷயத்தை எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக விரட்டுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய நாட்டிற்கு நலம். இந்தத் தீமை பிளேக், டைபாயிட், காலரா, வைசூரி ஆகிய தொத்து நோய்களைவிட அதிகக் கொடியதாகும். இந்தத் தொத்து நோய்களில் ஏதேனும் ஒன்று வங்காளத்தில் உண்டாகுமானால் அதைத் தடுப்பதற்காக அதை பீஹார் முதலிய இதர மாகாணங்களிலும் உண்டாகும்படி செய்யவேண்டுமென்று நாம் ஒருநாளும் எண்ண மாட்டோம். அதற்குப் பதிலாக அது ஏற்பட்ட இடத்திற்கு வெளியே பரவாமல் இருப்பதற்கான காரியங்களையே செய்வோம். நோய் வராதவர்களுக்கு தடை மருந்து குத்தி வைப்போம். கொதிக்க வைத்த ஜலத்தைக் குடிக்கச் செய்வோம். கிருமி நாசினிகளைத் தெளிப்போம். நோய் வந்தவர்களைத் தனியாக பிரித்து வைப்போம். அப்படி இருக்க வங்காளத்தில் ஏற்பட்ட வகுப்புவாதத் தொத்து நோயை இதர இடங்களுக்கும் பரவச்செய்வது அறிவுடைமையாகுமா? அது தேச க்ஷேமத்துக்கு உகந்த காரியமா? ஜனங்கள் பகுத்தறிவை உபயோகியாத பொழுதுதான் இத்தகைய விஷமத் தனமான கருத்துக்கள் வெளிவரவும் வேலை செய்யவும் முடியும்.

கே. ஜி. எம்.

## குரங்குகளை நாசம் செய்தல்

ஒரு நிருபர் கீழ்க்கண்ட பகுதியை ஒரு பத்திரிகையிலிருந்து கத்தரித்து அனுப்பி இருக்கிறார் :—

“ஒரிஸ்ஸா சர்க்கார் அறிக்கை கூறுவதாவது :— ‘குரங்குகளைக் கொல்வதென்பது முதலில் ஜனங்களுக்கு வெறுப்பாகத்தானிருந்தது. ஆனால் இப்பொழுது இந்த மாதிரி கொலை செய்யும் திட்டத்தால் குரங்குத் தொல்லை அதிகமாகக் குறைந்திருக்கிறது’ ஒரிஸா மாகாணத்தில் குரங்குகளால் விவசாயத்திற்குச் சொல்லமுடியாத தீங்கு உண்டாய்க் கொண்டிருந்தது. ஒரு குரங்கைக் கொன்றால் மூன்று ரூபாய் இனாம் என்று சர்க்கார் விளம்பரம் செய்தார்கள். இப்பொழுது மாகாணத்திலுள்ள குரங்குகளின் தொகையைக் குறைப்பதற்காக ஆண் குரங்குகளை கொல்லும் விஷயத்தில் சர்க்கார் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். அதனால் இனிமேல் சிறிதோ பெரிதோ ஆண் குரங்கைக் கொன்றால், 4 ரூபாயும் பெண் குரங்கைக் கொன்றால் இரண்டு ரூபாயும் இனாம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.”

இந்தப் பத்திரிகைத் துணுக்கை அனுப்பிய நிருபர் கீழ்கண்டவாறு எழுதுகிறார் :—

“இந்த மாதிரி குரங்குகளை கொல்வது அநியாயமல்லவா? காந்தியடிகள் இந்தப் பிரச்னையைப் பற்றி ஹரிஜன் பத்திரிகையில் எழுத வேண்டும். காங்கிரஸ் சர்க்கார்களிடம் தமக்குள்ள செல்வாக்கை உபயோகித்து இந்த வாயற்ற ஜீவன்களைக் கொல்லும் அநியாயத்தை நிறுத்த வேண்டும்.”

நானும் வாயற்ற ஜீவன்களிடத்தில் அன்பும் இரக்கமும் உடையவன்தான். ஒரு சிறு பூச்சியைக்கூட என்னால் கொல்ல முடியாது. ஆயினும் ஒரிஸா சர்க்கார் மேற்கொண்டுள்ள திட்டத்தைக் கைவிட்டு விடும்படியாகச் சொல்லமுடியாது. பயிர்களை நாசம் செய்யும் இந்த மிருகங்களைக் கொல்லாமல் விவசாயத்தைக் காப்பதற்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. குரங்குகள் தான் பயிர்களை நாசம் செய்கின்றன என்பதில்லை. எலிகளும், முயல்களும், மான்களும், காட்டுப்பன்றிகளும் நாசம் செய்கின்றன. அவைகளையும் அழித்து ஒழிக்கவேண்டியவர்களாகவே இருக்கிறோம். நாம் நாகரீகமாக வாழவேண்டுமானால் இத்தகைய மிருகங்களைக் கொல்லுவது இன்றியமையாததே யாகும். இல்லையானால் நாமும் மற்ற மிருகங்களைப் போல மிருகங்களாகவே வாழ வேண்டியதுதான்.

கே. ஜி. எம்.

## வாசகர்களுக்கு

காந்தியடிகள் கிழக்கு வங்காளத்தில் தவம் செய்ய ஆரம்பித்தவுடன் ஹரிஜன் பத்திரிகை நடத்தும்படி திரு. விநோபா, காகாசாகிப் கலேல்கார், கிஷோர்லால் மஷ்ருவாலா, நர்ஹரிபரீக் ஆகிய நால்வரையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்: அவர்கள் வேறு வேறு இடங்களிலிருந்து கட்டுரைகள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். காந்தியடிகளும், பியாரேலால்ஜியும் எந்தக் கட்டுரையையும் தாங்கள் வாசித்துப் பாராமல் ஹரிஜனில் பிரசுரிக்க சம்மதிப்பதில்லை. ஆனால் அது இப்பொழுது சாத்தியமில்லை. ஆதலால் இப்பொழுது ஹரிஜனில் கூறப்படும் அபிப்பிராயங்கள் காந்தியடிகளுடைய சம்மதத்தையோ அல்லது பியாரேலால்ஜியினுடையசம்மதத்தையோபெற்றவை என்று எண்ணலாகாது.

நிர்வாக ஆசிரியர்

அடிமைக்கு அதிகாரம் வந்தால் அவனைவிடப் பெரிய அக்கிரமி கிடையாது—ஆங்கிலப் பழமொழி

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

டிசம்பர் 22 ஞாயிறு 1946


## முன்னேற்றத்திற்கான அறிகுறி

திரு. பரீக்ஷித்லால் மூஜும்தார், ஷியாம்லால்ஜிக்கு கீழ்க்கண்டவாறு எழுதி இருக்கிறார் :—

"கடவுள் அருளால் காரியசித்தியாகிக் கொண்டு வருகிறது என்பதை தங்களிடம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறேன். நான் இதை பர்தோலியி லிருந்து எழுதுகிறேன். இந்த வருஷம் காந்தி ஜயந்தி வாரத்தில் நாற்பது பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்க ஹரிஜனங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவிஷயத்தில் எந்தவிதமான நிர்ப்பந்தமும் செய்யப்படவில்லை. ஜனங்கள் தாங்களாகவே தான் இந்த நல்ல காரியத்தை செய்திருக்கிறார்கள், நம்முடைய ஊழியர்கள் எல்லா இடங்களுக்கும் போக சாத்தியப்படவில்லை. ஆனால் அங்கங்கேயுள்ள ஜனங்களே ஹரிஜனங்களைக் கூட்டிக்கொண்டு போய் பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கும்படி செய்திருக்கிறார்கள். நானும் சில ஊர்களுக்குச் சென்றிருந்தேன். அங்கு ஏற்பட்டிருக்கும் மாறுதல்களைக் கண்டு பிரமித்துப் போனேன். அதற்காக கடவுளுக்கு வந்தனம் செலுத்துகிறேன். இந்த மாறுதலுக்குக் காரணம் காந்தி யடிகளுடைய முயற்சிகளும் அவர் சமீபத்தில் எழுதிய கட்டுரைகளுந்தான் என்பதில் சந்தேகமில்லை, கிராமங்களில் இளைஞர்களே முன் வந்து இவைகளைச் செய்திருக்கிறார்கள். சில இடங்களில் வயதானவர்கள் அவர்களுடைய முயற்சிகளை ஆசீர்வதிக்கிறார்கள், சில இடங்களில் எதுவும் செய்யாதிருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் யாரும் தடை செய்யவில்லை. பல இடங்களில் சமபந்தி போஜனங்களும் நடந்திருக்கின்றன. அத்தகைய சமபந்தி போஜனங்களில் பெரியதொன்று கெய்ரா ஜில்லாவின் உண்மையான தலைநகரமாகிய நட்யா என்னுமிடத்தில் நடந்தது. அதில் 450 பேர் கலந்து கொண்டார்கள். அவர்களில் சுமார் 250 பேர் சாதி ஹிந்துக்கள். எல்லோரும் வீட்டிலிருந்து சமைத்த உணவைக் கொண்டு வந்து 1928-ம் வருஷத்தில் தக்கர் பாபாவால் தோட்டிகளுக்காக கட்டப்பட்ட ராமர் கோவில் முன்னால் உட்கார்ந்தார்கள். 200 தோட்டிகள் சேர்ந்து கொண்டார்கள். சந்தோஷமாக பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் சாப்பிட்டார்கள். வீட்டிலிருந்து உணவு கொண்டு வந்ததால் பங்கீட்டு விதிகள் மீறப்படவில்லை. கெய்ரா ஜில்லாவில் இந்த மாதிரியான பெரிய கூட்டம் இதற்குமுன் நடந்ததே இல்லை.

வைதிகக் கோட்டையாகிய காடி என்னும் ஊரில் ஒரு முக்கியமான கிணறு ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டது. பரோடா சமஸ்தானத்திலுள்ள பத்ரா என்னும் ஊரில் 150 ஜாதி ஹிந்துக்கள் ஹரிஜனங்களுடன் சமபந்தி போஜனம் செய்தார்கள். இந்தவிதமாக பல சம்பவங்கள் நடைபெற்றன. இது சம்பந்தமாக பாபாவுக்கு நீண்ட கடிதம் எழுத ஆசை. ஆனால் அவர் படிப்பதற்கு கஷ்டம். தயவுசெய்து இந்தக் கடிதத்தை அவருக்குப் படித்துக் காட்டுங்கள்."

நாம் விரும்பும் முன்னேற்றம் அதிகம். இப்பொழுது இந்தக் கடிதம் கூறும் முன்னேற்றம் சொற்பம். ஆயினும் குஜராத் மாகாணம் தீண்டாமை விலக்கு விஷயத்தில் பின்னாலேயே நிற்கின்றபடியால் திரு பரீக்ஷித்லால் கூறும் சொற்ப முன்னேற்றமும் சந்தோஷமே தருகின்றது. அது நிலைத்து நிற்குமானால் இனிவரும் முன்னேற்றத்திற்கு அறிகுறியாகும். தீண்டாமையின் சவப் பெட்டியில் அடிக்கும் ஒவ்வொரு ஆணியும் ஹிந்து மதத்தைப் புனிதமாக்குவதேயாகும்.

ஸ்ரீராம்பூர், மோ. க. காந்தி.

## கிராமக் கைத்தொழில்களும் அரசாங்கமும்.

காங்கிரஸ் அரசாங்கங்கள் கிராமக் கைத்தொழில் விஷயத்தில் கவனம் செலுத்துகின்றன. சிலமாகாணங்களில் அதற்காக தனி மந்திரியும் ஏற்பட்டிருக்கிறார். கிராமக் கைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான சட்டங்களைப் பற்றி ஆலோசித்துக் கூறுவதற்காகவும் கிராமக் கைத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களை அந்தந்த கிராமங்களில் உபயோகிப்பதற்காக அவைகளை வெளியூர்களுக்கு போகவொட்டாமல் தடுப்பதற்கான சட்டங்களைப் பற்றி ஆலோசிப்பதற்காகவும் பம்பாய் சர்க்கார் திரு. மனு சுபேதார் தலைமையில் ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக சில விஷயங்களை எழுத விரும்புகிறேன். நான் கூறப் போகும் விஷயங்களை மற்றவர்கள் கவனியாமல் இருப்பதினாலேயே நான் அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்பொழுது நம்முடைய வாழ்வில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. விஞ்ஞானம் மனிதனுக்குச் செய்து கொடுக்கும் பொருள்களும் நாளுக்கு நாள் அதிகமாய்க் கொண்டு வருகின்றன. ஆதலால் இறந்து போன கிராமக் கைத்தொழில்களையும் இறந்து போகும் தறுவாயிலுள்ள கிராமக் கைத்தொழில்களை மட்டும் ஆராய்ந்தால் போதாது என்று நான் முதன் முதலாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஜனங்கள் தற்காலத்தில் எந்த விதமான புதிய பொருள்களையும் எந்த பழைய பொருள்களைப் புதிய முறையிலும் உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதையும் இவைகளில் எவற்றை எல்லாம் கிராமங்களில் உற்பத்திசெய்ய முடியும் என்பதையும் ஆராய வேண்டியது அவசியமாகும். இவற்றுள் சிலவற்றை கிராமத்தாருடைய உபயோகத்துக்காகவும் மற்றவற்றை நகரவாசிகளின் உபயோகத்துக்காகவும் உற்பத்தி செய்யலாம்.

ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்களை தானே உற்பத்தி செய்து கொள்ள வேண்டுமென்பது ஒருநல்ல லட்சியம்தான். ஆனால் கிராமக் கைத்தொழில்களோடு அந்த விஷயத்தை முடித்துவிடக் கூடாது. கிராமத்திலுள்ள திறமை வாய்ந்தவர்கள் கிராமத்தைவிட்டு வெளியே போய்விடாமல் இருக்க வேண்டுமானாலும் பட்டணங்கள் அளவுக்கு மிஞ்சிப் பெரிதாக ஆகிவிடாமல் இருக்க வேண்டுமானாலும், நகரங்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய கைத்தொழில்களை கிராமங்களில் அமைக்க வேண்டியது அவசியமாகும். இது விஷயத்தில் கவனிக்க வேண்டிய அடிப்படைத்தத்துவம் யாதெனில் மூலப் பொருள் கிடைக்கும் கிராமத்திலேயே அதைக் கொண்டு கைத்தொழில் பொருள் செய்து பட்டணங்களுக்கு அனுப்பவேண்டு மென்பதே யாகும்.

உதாரணமாக ரொட்டி, பிஸ்கெட், ஊறுகாய், மஸாலா பொடி, அப்பளம், மிட்டாய், பற்பொடி, மாவு, தோல் சாமான்கள், மருந்து மூலிகைகள், மருந்துகள் போன்ற எண்ணிறந்த வஸ்துக்கள் கிராமத்து ஜனங்களுக்கும் பட்டண வாசிகளுக்கும் தினசரி உபயோகத்திற்கு இன்றியமையாத பொருள்

களாக ஆகியிருக்கின்றன. இவற்றில் சில பெரிய கைத் தொழிலுக்கும் தேவையாயிருக்கின்றன.

இவற்றிற்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிராமங்களிலும் அவற்றை அடுத்த காடுகளிலும் உற்பத்தியாகின்றன. அவற்றை கிராமங்களிலேயே உபயோகப்படுத்தாததால் அவற்ருல் செய்யப்பட்ட பொருள்களை கிராம வாசிகள் பட்டணங்களிலிருந்து தருவிக்க வேண்டியவர்களாய் இருக்கிருர்கள். அத்தகைய கைத் தொழில்களை கிராமங்களில் செய்வதற்கு வேண்டிய வசதிகளை சர்க்கார் அளிப்பார்களானல் கிராமங்களெல்லாம் செழிப்பான இடங்களாக ஆகிவிடும். இளைஞர்கள் வேலைக்காக கிராமங்களை விட்டு வெளியேறி பட்டணங்களுக்குச் செல்ல மாட்டார்கள்.

இந்தக் காரியம் சித்தி பெறுவதற்காக சர்க்கார் கீழ் கண்ட விதமாக உதவிகள் செய்ய வேண்டும் :—

(1) பெரிய அளவில்செய்யும் கைத் தொழில், அதே விதமான பொருளை உண்டாக்கும் சிறிய அளவில் செய்யும் கைத் தொழிலை கொன்றுவிடும் என்பதை தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். மின்சார சக்திக்கும் மனித சக்திக்கும் உள்ள போட்டியன்று. ஒவ்வொரு கிராமத்துக்கும் மின்சார சக்தி அனுப்பி வைத்தாலும் கைத் தொழிலின் அளவுக்கு ஒரு வரையறை ஏற்படுத்தாவிட்டால் கிராமக் கைத் தொழில் முன்னேற மாட்டாது. ஆதலால் கிராமங்களில் ஏற்படுத்தக் கூடிய தொழிற்சாலை இந்த அளவில் தான் இருக்கலாம் என்று திட்டம் செய்வது முதற் காரியமாகும். ஆதலால் ஒவ்வொரு கிராமமும் உற்பத்தி செய்யும் பொருள்களின் அளவை கட்டுப் படுத்த வேண்டும். அத்துடன் அந்தப் பொருள்கள் வெகு தூரத்திலுள்ள இடங்களுக்கு போவதற்கு இடங் கொடுத்தலாகாது. அதையும் கட்டுப்படுத்த வேண்டும்.

(2) கிராமக் கைத்தொழில்கள் முன்னேருதிருப்பதற்குக் காரணம் மின்சார சக்தி கிடையாமல் இருப்பதன்று. கிராமத்தில் தொழிலாளிக்கு வேண்டிய பணங் கிடையாமலிருப்பதுதான் பிரதானமான கஷ்டம். உதாரணமாக தோல் பதனிடும் கைத் தொழிலை கவனிப்போம். கிராமத்தில் தோல் பதனிடுபவர்களுக்கு வருஷ முழுவதும் வேலை இருக்க வேண்டுமானல் அவரிடம் தோலும் சுண்ணும்பும் பட்டையும் சாயமும் ரசாயனப் பொருள்களும் போதுமான அளவு கைவச மிருக்கவேண்டும். அவற்றை பருவகாலத்தில் வாங்கி நன்ருக கட்டப்பட்ட கிடங்குகளில் சேகரித்து வைக்கவேண்டும். நல்ல தோல் பதனிட்டு நல்ல விலைக்கு விற்க வேண்டுமானல் மடிப்பில்லாமல் தோல்களை ஊற வைப்பதற்கு மண் தொட்டிக்குப் பதிலாக பெரிய ஸிமெண்ட் தொட்டி அவசியமாகும். இப்பொழுது அவர் வைத்துக்கொள்ளக் கூடியதெல்லாம் மிகச் சிறிய தொட்டியேயாகும். இந்த சொற்ப வஸதிகளுக்குங் கூட அவர் கிராமத்திலுள்ள லேவாதேவிக்காரரை எதிர் பார்க்கவேண்டியவராக இருக்கிருர். அதிக வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது அல்லது தரகர்கள் முன் கூட்டி பணம் கொடுத்து தாங்கள் சொல்லும் விலைக்கு வாங்கிக் கொள்ளுகிருர்கள். ஆதலால் கிராமத்திலுள்ள தொழிலாளி பேரளவில்தான் சுதந்திரமுடையவராக இருக்கிருர். ஆனல் உண்மையில் ஒரு முதலாளியின் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளியை விட குறைவான ஊதியமே பெறுகிருர். ஆதலால் அவரை சுதந்திரமுள்ள தொழிலாளி என்று கூறுவது அர்த்தமற்றதாகும். உண்மையில் கசக்கிப் பிழியப்படும் தொழிலாளியே ஆவார்.

பெரிய அளவில் கைத் தொழில் நடத்தும் முதலாளி பொருள்களை அதிக விரைவாகவும் அதிக அளவிலும் உற்பத்தி செய்யக் கூடியவராக இருக்கிருர். அது மட்டுமன்று, அவருக்கு பணம் குறைந்த வட்டிக்குக் கிடைக்கிறது. அத்துடன் அவர் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நல்ல விலையும் கிடைக்கிறது.

ஆதலால் கிராமக்கைத் தொழிலை ஆதரிக்க வேண்டுமானல் தொழிலாளிகளுக்குக் குறைந்த வட்டிக்கு எளிதாக பணம் கிடைக்கும்படி செய்யவேண்டியது பிரதானமான அவசியமாகும். பெரிய முதலாளிகளுக்கு எந்த வட்டிக்குக் கிடைக்கிறதோ, அதை விடக் குறைவான வட்டிக்குக் கிடைக்க வேண்டும். வட்டி வாங்கும் வழக்கத்தை நான் எதிர்க்கிறேன். ஆனல் அதைப்பற்றி நான் இப்பொழுது விவாதிக்க விரும்பவில்லை. ஆனல் பெரிய முதலாளிக்கு குறைந்த வட்டிக்குக் கிடைப்பதால் சிறிய கைத்தொழில்கள் அழிந்து போகின்றன என்பது மட்டும் நிச்சயம். கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைப்பது போல குறைந்த வட்டிக்குக் கிடைப்பதில்லை. பலரை ஒரு இடத்தில் சேர்த்து கஷ்டப்படுத்தி வேலை வாங்கும் ஒருவருக்கு கிடைப்பதைவிட தம் கையால் வேலை செய்யும் ஒருவருக்கு அதிக சுலபமாக கிடைக்க வேண்டாமா?

இந்த மாதிரியான நிலைமை இருப்பதால் கிராமக்கைத் தொழிலாளிக்குத் தம்முடைய தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற ஆசையோ புதிய முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையோ உண்டாவதில்லை. கிராம ஊழியர்கள் எவ்வளவு உழைத்தும் பலனுண்டாவதில்லை.

(3) கிராமக் கைத்தொழிலாளி யோக்கியராகவும் சுறு சுறுப்புள்ளவராகவும் இருந்தால் அவருக்கு பண முடை ஏற்படாதவாறு செய்ய வேண்டும். அடுத்ததாகச் செய்யவேண்டிய உதவி யாதெனில் எப்படிப் பொருள்களை சுலபமான முறையில் அழகாக அதிகமாக செய்ய முடியுமென்பதையும் கற்றுக் கொடுப்பதேயாகும். கிராமக் கைத்தொழில் என்பதற்கு காடு முரடான அழகில்லாத பொருள்கள் என்ற அர்த்தமில்லை. அத்தகைய பொருள்களைக்கொண்டே திருப்தியடையவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் கிடையாது. ஒரு காலத்தில் கையால்செய்த பொருள்கள் மிஷினல் செய்த பொருள்களை விட அதிக நேர்த்தியாகவே இருந்தன. "மலிவானதும் அசிங்கமானதும்" என்ற சொற்ருெடர் மிஷினல் செய்யப்பட்ட பொருள்களுக்கேயன்றி கையால் செய்யப்பட்ட பொருள்களுக்கன்று. ஆனல் இப்பொழுதோ அது மாறிவிட்டது. கிராமத்தில் செய்யப்படும் பொருள்கள் "கிராக்கியாகவும் அசிங்கமாகவும்" இருக்கின்றன. மூலப்பொருள்களைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் தரம் பிரித்தும் வைக்க வேண்டும். ஆயுதங்களை ஒழுங்காகவைக்க வேண்டும். செய்யும் பொருள்கள் அளவிலும் தன்மையிலும் கவனித்துச் செய்யப்பட வேண்டும். அவைகள் சரியாகச் செய்யப்பட்டிருக்கிறதா என்று அடிக்கடி சோதிக்கப்பட வேண்டும். அவைகளை அழகாகவும் நேர்த்தியாகவும் செய்ய வேண்டும். இந்த விஷயங்களை நிபுணர்கள் கூட கவனிப்பதாகத் தெரியவில்லை. கவனிக்கவேண்டுமென்ற உணர்ச்சி இருப்பதாகக்கூட தெரியவில்லை. ஆசிரியர்கள் இந்த விஷயங்களை நன்ருக கற்றுக்கொண்டு கிராம கைத்தொழிலாளர்களுக்கு நிதர்சனமாக செய்து காட்டி கற்பிக்க வேண்டும். இந்த விதமான உதவியை சர்க்கார் செய்து தரவேண்டும். இந்த மாதிரி காரியத்துக்கு போதுமான ஆசிரியர்களை சர்க்கார் தயார் செய்ய வேண்டும். இத்தகைய ஆசிரியர்கள் இல்லாமல் எந்தத் திட்டம் போட்டாலும் எவ்வளவு பணம் செலவு செய்தாலும் பிரயோசனப்படாது.

(4) (அ) இப்பொழுது பஞ்சாலும் பட்டாலும் செய்யப்படும் துணிகளைக் கெடுப்பதற்காக இமிடேஷன்

மானபங்கத்திலும் மரணத்தை ஏற்கும் பெண்ணை அமரரும் போற்றுவர்—டிக்குன்ஸி

துணிகள் வருகின்றன. அவைகளை வராமல் தடுக்க வேண்டும்.

(ஆ) பெரிய முதலாளிகள் கிராமத்தில் செய்யப்படும் பொருள்களை கிராமத்தாரே உபயோகிக்க ஒட்டாமல் வெளி இடங்களில் விற்பதற்காக வாங்கிக்கொண்டு வந்து விடுகிறார்கள். உதாரணமாக கிராமங்களில் பால் கறந்தாலும் கிராமத்திலுள்ள மக்களுக்கு பால் கிடைப்பதில்லை. பட்டணங்களில் அதிக விலைக்கு விற்பதற்கும் பால் பொடி செய்வதற்கும் வேறு ஆடம்பரப் பொருள் செய்வதற்கும் உபயோகமாய் விடுகிறது. பரோபகார காரியார்த்தமாக ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களுங் கூட இந்த மாதிரிச் செய்கின்றன. தனிச் சொத்துரிமை என்பது முதலாளித்துவத்தின் பிரதான அம்சமல்ல. அதன் பிரதான அம்சம் எவ்வளவு லாபம் பெற முடியும் என்னும் நோக்கம் ஒன்றே யாகும். அதனால்தான் கோடிக் கணக்கான மக்களுக்கு வாழ்விற்கு இன்றியமையாத பொருள்கள் கிடையாமல் போகின்றன. ஆதலால் இதையும் தடுக்க வேண்டும்.

இதை எப்படிச் செய்ய முடியும்? :—

1. இந்த விஷயமானது இந்திய சுயராஜ்ய அரசியல் அமைப்பைப் பொறுத்ததாக இருக்கின்றது. சர்க்கார் அதிகாரத்தைப் பிரிப்பது போலவே தொழிலையும் பிரிக்க வேண்டும். இப்பொழுதுகூட சர்க்கார் நிர்வாகம் பிரிக்கப்பட்டே நடந்து வருகின்றது. ஆனால் நிர்வாக விஷயங்கள் மட்டுந்தான் பிரிக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பு முழுவதும் மத்திய சர்க்காரிடமே இருந்து வருகிறது. அதனால் கிராமங்கள் தாமாக எதையும் ஆரம்பித்துச் செய்ய முடியவில்லை. கிராமங்கள் செழிக்க வேண்டுமானால் இந்த நிலைமை மாற வேண்டும்.

2. ஜனங்கள் எப்படி சூரியனையும் மழையையும் நம்பக்கூடியவர்களா யிருக்கிறார்களோ அப்படியே சர்க்காரையும் நம்பக்கூடியவர்களா யிருக்க வேண்டும். அவர்கள் தங்கள் வாழ்வைத் தாங்களே திட்டப்படுத்திக் கொள்பவர்களா யிருக்க வேண்டும். சர்க்கார் நமக்கு வேண்டிய பணம்தருவார்கள், இதர வசதிகளும் செய்து கொடுப்பார்கள், எவ்வித லஞ்சமும் கொடாமல் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய உதவியைப் பெற முடியும் என்ற எண்ணம் ஜனங்களிடம் உண்டாக வேண்டும். ஜனங்களுடைய பொருளாதார நிலைமை புத்துயிர் பெறவேண்டுமானால் இன்றியமையாது வேண்டப் படுவது யாதெனில் பூரணமான பயிற்சி பெற்றவர்களும் மரியாதையாக நடப்பவர்களும் லஞ்சம் வாங்காதவர்களும் நம்பிக்கை உண்டாக்கக் கூடியவர்களுமான உத்தியோகஸ்தர்களேயாகும். இப்பொழுது உத்தியோகஸ்தர்கள் தங்களை ஜனங்களுடைய எஜமானர்களாகவே கருதிக் கொள்கிறார்கள். அந்த எண்ணத்தை மாற்றி ஜனங்களுடைய ஊழியர் என்ற எண்ணத்தை உண்டாகும்படி செய்ய வேண்டும்.

3. ஜனங்களுடைய ஒழுக்கமும் அரசியல்வாதிகளுடைய ஒழுக்கமும் சீர்திருந்தினால்தான் உத்தியோகஸ்தர்களுடைய ஒழுக்கம் சீர்திருந்தும். அதிகார போகம் பொதுஜன வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது. அது உள்ளவரை எந்த நன்மையும் உண்டாக மாட்டாது.

4. இந்த மாதிரியான நிலைமை இருப்பதால்தான் கூட்டுறவு இயக்கம் மேனாடுகளில் செய்த அளவு நன்மை இந்த நாட்டில் செய்யவில்லை. கிராம சுயராஜ்யம்கூட கூட்டுறவு சங்கங்களுக்குப் பதிலாக ஆகிவிட முடியாது. கூட்டுறவு சங்கங்கள்தான் கிராம கைத்தொழில் முயற்சிகளுக்கு ஆதாரமாகும்.

5. கிராம தொழிலாளிகள் கையாளும் ஆயுதங்களைத் திருத்தியமைக்க வேண்டும். இதுவிஷயத்தில் இரண்டுவிதமான அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. சிலர் எவ்வளவுக்கெவ்வளவு ஆயுதங்களைக் குறைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்று கூறுகிறார்கள். அதில் ஒரு உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆயுதமில்லையே என்று கையை விரிக்க வேண்டிய அவசிய மிருக்கக் கூடாது; செய்வதற்கு வேண்டிய ஆயுதத்தைவிட செய்து தீரவேண்டுமென்ற மன உறுதியே முக்கியமான தேவையாகும். சிலர் சிறந்த ஆயுதங்களை மெஷின்களைக் கொண்டேனும் செய்து கொடுக்க வேண்டுமென்றும் அப்பொழுதுதான் உற்பத்தியைப் பெருக்க முடியுமென்றும் வற்புறுத்துகிறார்கள்.

இரண்டு அபிப்பிராயங்களும் வேண்டியவைகளே. ஆனால் நாளடைவில் இரண்டாவது அபிப்பிராயந்தான் முக்கியமானதும் சாசுவதமானதுமாகும். நமக்கு இக்காலத்தில் தினசரி வாழ்க்கைக்கு அநேக பொருள்கள் தேவையாய் விட்டன. அந்தப் பொருள்கள் வேண்டிய அளவும் அதிகமாய் விட்டது. ஆதலால் மின்சார சக்தியால் ஓட்டப்படும் மெஷின்கள் வேண்டுமா வேண்டாமா என்பதை இப்பொழுது தீர்மானிக்க முடியாது. நாம் பிற நாட்டு வியாபாரத்தை விரும்பாமல் நம்முடைய நாட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் நமக்கு வேண்டிய பொருள்களை நம்முடைய நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ளவும் விரும்புவோமானால் அநேக பொருள்களைச் செய்வதற்கு மின்சார சக்தியால் ஓட்டும் மெஷின்கள் தேவைப்படா. எல்லோரும் கையால் வேலை செய்ய ஆரம்பித்து நமக்கு வேண்டிய பொருள்களை அதனால் மட்டும் செய்ய முடியாது என்று காணும்பொழுதே மின்சார சக்தியால் ஓடும் மெஷின்களைக் கையாளவேண்டும். அதுவரை மனிதனாலோ, மிருகத்தாலோ ஓட்டும் மெஷின்களை அதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய மாதிரியில் திருத்தியமைக்க முயற்சி செய்ய வேண்டும்.

பலமுடையவனைப்போலவே பலமில்லாதவனும் தொழில் செய்யக் கூடிய முறையில் மெஷின்களைத் திருத்தி யமைப்பது நல்லது. பலவீனமானவன் தனுஷ் தக்ளியிலோ அல்லது கைராட்டினத்திலோ எவ்வளவு நூலை நூற்க முடியுமோ அவ்வளவு நூலை பலமுள்ளவன் சாதாரண தக்ளியில் நூற்று விடுவான். தனக்கு வேண்டிய நூல் மட்டும் நூற்க விரும்பினால் பலவானுக்கு சாதாரண தக்ளி போதும். ஆனால் பல வீனமானவனுக்கு அது போதாது. தனுஷ்தக்ளியாவது ராட்டினமாவது தேவைப்படும். தேசத்திலுள்ள வயோதிகர்களும் பல வீனர்களும் வேலைசெய்ய வேண்டுமானால் அவர்களுக்கேற்ற ஆயுதங்களைச் செய்து கொடுக்க வேண்டும். வார்தா கல்வித்திட்டம் முக்கியமானதாக இருந்தபோதிலும் அதை இங்கு விவரிக்க விரும்பவில்லை. அந்தத் திட்டம் பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமின்றி மனிதனுக்கு வேண்டிய பூர்ணமான கல்விக்கும் அவசியமானதாகும் என்பதோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

அரசாங்கத்தின் சகல இலாகாகளையும் ஒன்றோடொன்று இணைப்பதைக் குறித்தும் இலாகாக்களின் வேலையைக் குறைப்பதைக் குறித்தும் இப்பொழுது விவரிக்க விரும்பவில்லை. அவற்றைக் குறித்து மற்றவர்கள் போதுமான அளவு ஏற்கனவே எழுதி இருக்கிறார்கள்.

கே. ஜி. எம்.

### உருளி இயற்கைச் சிகிச்சை சாலை.

இந்த இயற்கைச் சிகிச்சை சாலை 1946 மார்ச் 23-ம் தேதி காந்தியடிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேச பக்தனுக்கு தன்னுடைய நாடே சிறந்த நாடு—கோல்ட்ஸ்மித்

அவர் ஒருவாரந் தான் அங்கே இருந்து காரியங்களை கவனிக்க முடிந்தது. அதன் பிறகு அந்த வேலை என்னிடத்திலும் இங்குள்ள இதர ஊழியர்களிடத்திலும் ஒப்புவிக்கப்பட்டது. காந்தியடிகள் இருந்த பொழுது நோயாளிகள் நாளுக்கு நாள் அதிகமாக வந்து கொண்டிருந்தார்கள். அவர்போன பிறகு நோயாளிகளின் தொகை அதிகமாகக் குறைந்து விட்டது. நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யும் வேலை, ஏப்ரல் இரண்டாவது வாரம் ஆரம்பமாகி மே, ஜூன் மாதங்கள் முழுவதும் நடந்து வந்தது. பிறகு மழை காலம் ஆரம்பித்து விட்டதால் கிராமவாசிகள் வயல்களைக் கவனிக்கப்போய் விட்டார்கள். போக்கு வரத்து வசதியும் கஷ்டமாகி விட்டது. அதனால் மிகக் குறைவாகவே நோயாளிகள் வந்தார்கள்.

சிகிச்சைசாலையில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் மொத்தத் தொகை 567-அவர்களில் 23 பேர் சிகிச்சை சாலையில் வைத்தே சிகிச்சை செய்யப்பட்டார்கள். ஒரு பெண் சுகமாக பிரஸவித்தாள். சிறிய ஆபரேஷன்கள் 10 செய்யப்பட்டன. மற்ற நோயாளிகளுக்கு வஸ்தி, ஸ்நானம், இடுப்பு ஸ்நானம் முதலியன மூலம் சிகிச்சை செய்யப்பட்டது. 300 பேர் நன்ருகக் குணமடைந்தார்கள். மற்றவர்கள் மருந்தில்லை என்றும் சாப்பாட்டில் பத்தியமாய் இருக்கவேண்டுமென்றும் தெரிந்த உடன்,நின்றுவிட்டார்கள். சிகிச்சை எனிமா ஈரத்துணி வைத்துக்கட்டுதல், ஸ்நானம், இடுப்பு ஸ்நானம் முதலியவைகள் மூலம் செய்யப்பட்டது. எலுமிச்சம் பழச்சாறு தேன், முளை ஊறிய தானியங்கள், பச்சைக்காய் கறிகள், பழங்கள், உபயோகப்படுத்தப்பட்டன. சப்பாத்தியும், உப்புபுளி, மிளகாய் இல்லாமல் வேகவைத்த காய் கறிகளும் கொடுக்கப்பட்டன. பாசிப்பருப்புப்பொங்கலும் சிலசமயங்களில் உபயோகப்படுத்தப்பட்டன. சில சமயங்களில் மோரும் தயிரும் மட்டுமே உணவாகக் கொடுக்கப்பட்டன.

தினந்தோறும் ஒவ்வொரு நோயாளிக்கும் 8 அணு முதல் 2 ரூபாய் வரை செலவாகிறது. பணக்காரர்கள் அதிக விலையுள்ள ஆகாரங்களை வாங்கிக்கொள்கிருர்கள்.

சொறி சிறங்கும், மலேரியாவும், மலச்சிக்கலும்தான் பிரதானமான நோய்கள். அவைகளுக்கு அடுத்ததாக காயங்கள், வயிற்றுவலி, கண்ணோய் முதலியவைகளை சொல்லவேண்டும். நாலு பேர் க்ஷயரோகமுடையவர்கள்.

இனிமேல் பிரஸவத்திற்காக ஒருதனியறை ஏற்படுத்தவும் ஆப்பரேஷன் செய்வதற்காக ஒரு தனியறை ஏற்படுத்தவும் எண்ணியிருக்கிருேம். நோயாளிகளுக்கு சுத்தமான பால் கொடுப்பதற்காக பால் பண்ணை ஏற்பத்தவும் எண்ணியிருக்கிருேம். அதற்காக 5000 ரூபாய் செலவு செய்து ஒரு நல்ல தொழு கட்ட வேண்டி இருக்கிறது. தக்க சமயத்தில் ஜனங்கள் போதுமான ஆதரவு அளிப்பார்களென்று நம்புகிறேன்.

உருலி கஞ்சன் 1—12—46 ஏ. யூ. பகவத்

## ஹிந்துஸ்தானியும் சர்க்காரும்

சர்க்காரின் ஹிந்துஸ்தானிக் கொள்கை திருத்தி அமைக்கப்படவேண்டும். இப்பொழுது அரை மனதிலேயே காரியங்கள் நடைபெற்று வருகின்றன. இடையில் சில வருஷஷங்களாக ஏற்பட்ட குழப்பங்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம் ஆனல் இப்பொழுது மறுபடியும் பொதுஜன சர்க்கார் ஏற்பட்டிருக்கிற படியினல் கொள்கையைத் திருத்தி அமைப்பதற்குச் சந்தர்ப்ப மேற்பட்டிருக்கிறது. ஹிந்துஸ்தானி விஷயம் நியாயமானதாக இருப்பதால் நம்முடைய சர்க்கார் பிரியமில்லாத ஜனங்களிடம் அந்நிய பாஷையை பிரிட்டிஷார் திணித்ததுபோல் திணிக்கவேண்டிய அவசியமில்லை. இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு குஜராத் ஹிந்துஸ்தான் பிரசார சமிதி கீழ்கண்ட சிபார்சுகளை சர்க்காருக்கு அனுப்பிவைததிருக்கிறது:—

ஹிந்துஸ்தானிபாஷை ஹிந்தி, உருது பாஷையினின்று வேறுபட்டதென்றும் அது தேவநகரி லிபியிலும் உருது லிபியிலும் எழுதப்படுவதால் பள்ளிக்கூடங்களில் இரண்டு லிபிகளையும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் பம்பாய் சர்க்கார் 1939 வருஷத்திலேயே விஷயத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறது. சர்க்கார் கூறும் இந்த தத்துவம் சரியானதாகும். ஆகலால் சமிதி கீழ்க்கண்ட சிபார்சுகளைச் சர்காருக்குச் சமர்ப்பிக்கின்றது:—

1. ஹிந்துஸ்தானி மெட்ரிகுலேஷன் வரை கற்றுக்கொடுக்கவேண்டும். அத்துடன் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்காகவும் மத்திய பாடசாலை ஆசிரியர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள போதன கல்லூரிகளிலும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

2. இப்பொழுது இரண்டு லிபிகளில் இஷ்டப்பட்ட லிபியைக் கற்றுக் கொள்ளலாமென்றும் ஹிந்தி பாடசாலைகளிலும் உருது பாடசாலைகளிலும் ஹிந்துஸ்தானியை கற்றுக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை என்றும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விதிகள் 1939ம் வருஷத்தில் வகுக்கப்பட்ட அடிப்படை தத்துவத்திற்கு முற்றிலும் முரண்பட்டதாக இருக்கின்றன.

இப்பொழுது இது விஷயத்தில் தர்க்க வாதங்கள் நடந்து வருகின்றன என்பதும் எந்த சர்க்காரும் பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக நடக்க முடியாதென்பதும் உண்மையே. ஆதலால் ஹிந்துஸ்தானியை இரண்டு லிபிகளிலும் கட்டாயமாக கற்கும்படி செய்யவேண்டுமென்று சமிதி சிபார்சு செய்ய முடியவில்லை. ஆனல் 1939 வருஷத்தில் வகுக்கப்பட்ட சர்க்கார் கொள்கையை அலக்ஷயம் செய்துவிட முடியாது. அதற்குத் தக்கவாறு இப்பொழுதுள்ள விதிகளைத் திருத்தியமைக்க வேண்டியது அவசியமாகும்.

3. ஹிந்தியோ, உருதுவோ படிப்பவர்கள் ஹிந்துஸ்தானியை இரண்டு லிபிகளிலும் கற்கவேண்டும் அல்லது ஒன்றுமே கற்காமல் இருந்துவிட வேண்டும். இந்த மாதிரிதான் விதி ஏற்படுத்த வேண்டும்.

4. இந்தமாதிரி விதி செய்தால் ஹிந்துஸ்தானி ஆசிரியர் இரண்டு லிபிகளையும் கற்றுக்கொடுக்கக் கூடியவரா யிருக்க வேண்டும். இதுதான் சர்க்காருடைய விருப்பம் என்பதை அறிந்து சமிதி சந்தோஷமடைகிறது.

5. ஹிந்தியோ உருதுவோ ஓரளவு கற்ற ஆசிரியர் மற்ற லிபியையும் கற்றுக்கொண்டு போதித்தால் போதாது. ஹிந்துஸ்தானி பிரசார சபா பயிற்சியளிக்கும் ஆசிரியர்கள்தான் ஹிந்துஸ்தானியைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

6. இப்பொழுது எந்த லிபியிலாவது தேச பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இருந்து வருகிறது. அந்தக் கட்டாயத்தை நீக்கி விடுவோம், பிரியமுள்ளவர்கள் இரண்டு லிபியிலும் ஹிந்துஸ்தானியைக் கற்றுக்கொண்டால் போதும் என்று சொல்வது ஆச்சரியம் தருவதா யிருக்கும். ஆனல் சரியான கொள்கையை வகுத்து சரியானபடி நிர்வகித்தால் சீக்கிரமாக மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

சமிதி கீழ்கண்ட சிபார்சுகளையும் செய்கிறது:—

(அ) சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இரண்டு லிபிகளையும் கற்கும்படி உற்சாகப்படுத்த வேண்டும். ஹிந்துஸ்தானி பரீக்ஷையில் தேறியவர்களுக்கு விசேஷ

சலுகை காட்டவேண்டும். குறைந்த பக்ஷம் இவ்வளவாவது ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்ள வேண்டுமென்று விதிகள் ஏற்படுத்த வேண்டும்.

(ஆ) இரண்டு லிபிகளிலும் ஹிந்துஸ்தானி கற்றுக்கொண்டவர்களுக்கு சர்க்கார் உத்தியோக விஷயத்தில் சலுகை காட்ட வேண்டும்.

(இ) ஹிந்துஸ்தானியைப் பரப்புவதற்காக ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களுக்கு ஆதரவும் உதவியும் அளிக்க வேண்டும்.

(7) இப்பொழுது சிறு வயதிலேயே ஆங்கிலம் கற்றுக்கொடுக்க ஆரம்பிப்பதை அறிஞர்கள் விரும்பவில்லை. அப்படிக் கற்றுக்கொடுப்பது ஹிந்துஸ்தானி கொள்கைக்கு ஒரு பெரிய தடையாகும். தேசிய பாஷை தாய் பாஷைக்கு அடுத்த ஸ்தானம் கொடுக்கப்பட வேண்டும். அதனால் ஆங்கிலம் இப்பொழுது வகித்துவரும் ஸ்தானத்திலிருந்து இறக்கி விடப்பட வேண்டும். இதுவும் புரட்சிகரமான காரியந்தான். ஆனல் அவசரமாகச் செய்ய வேண்டியதாகும்.

## அமரத்வம் வாய்ந்த நாமங்கள்

அலிபூர் என்னுமிடத்திலிருந்து ஹிந்து ஜில்லா ஜட்ஜ் 1946 ஆகஸ்டு 17-ந் தேதி அதிகாலையில் காப்பி சாப்பிடுவதற்கு முன் தினசரி பத்திரிகையைப் பார்க்க வேண்டுமென்று ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது காப்பி சாப்பிட அழைத்தார்கள். பத்திரிகை கொண்டுவரும் பையன் இன்னும் வராதது ஏனோ ஆச்சரியமா யிருக்கிறது என்று ஜட்ஜ் சொன்னார்.

"முஸ்லிம் லீக் மந்திரி சபை நேற்றைய தினத்தை பொது விடுமுறை நாளாக அறிவித்திருந்தது. முஸ்லிம் லீக் ஹர்த்தால் செய்யுமாறு கட்டளை யிட்டிருந்தது. அதனால் இன்று தினசரிப் பத்திரிகைகள் வெளி வரா" என்று பதில் கூறினர்கள்.

ஒரு பெரிய புயற்காற்று வந்து தம்மைச் சூழ்ந்து கொள்ளப் போகிறது என்பது அவருக்குத் தெரியாது. அவர் உள்ளே சென்று காப்பி சாப்பிட்டார். அப்பொழுது பக்கத்தில் வசித்த கான் சாமாவின் வீட்டின் அருகில் ஒரு பயங்கரமான சப்தம் உண்டாகியதைக் கேட்டார். உடனே அவர் காப்பி சாப்பிடுவதை விட்டுவிட்டு அந்த இடத்திற்கு வேகமாக ஓடினர். கான் சாமாவின் அடுத்த வீட்டில் ஒரு முஸ்லிம் வண்ணர் வசித்துக் கொண்டிருந்தார். ஹிந்துக்கள் கூட்டமாகச் சென்று அந்த முஸ்லிம் வண்ணருடைய குடும்பத்தை அழித்துவிட்டார்கள். ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன்மட்டும் எப்படியோ தப்பித்துக்கொண்டு என்னைக் காப்பாற்றுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள் என்று கூவிக் கொண்டு வெளியே ஓடினன். அப்படி ஓடும்பொழுது எதிரே ஜட்ஜைக் கண்டதும் தனனுடைய தாயின் முன்தானையில் முகத்தை வைத்துக்கொள்வதுபோல ஜட்ஜின் வேஷ்டியில் தன்னுடைய முகத்தை வைத்துக்கொண்டு அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டான். ஜட்ஜ் அவனை தம்முடைய இரண்டு கைகளாலும் அணைத்து வைத்துக்கொண்டு அவனுக்குத் தேறுதல் கூறினார். என் மகனே என்னுடன் வா, உன்னுடைய ரோமத்துக்கு தீங்கு இழைக்கக்கூட யாரும் துணிய மாட்டார்கள் என்று கூறினர்.

பையன் தேம்பித் தேம்பி அழுதான். ஜட்ஜினுடைய கண்களிலும் நீர் நிறைந்துவிட்டது. அப்பொழுது ரத்த வெறிகொண்ட அக்கிரமக் கூட்டத்தார் அவரிடம ஓடிவந்து "தயவுசெய்து அந்தப் பையனை எங்களிடம கொடுத்து விடுங்கள். அவன் முஸ்லிம். அவனைக் கொல்லாமல் விடப்போவதில்லை" என்று கூறினர்கள்.

ஜட்ஜ் :—அது முடியாது. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் உயிரோடிருக்கும் வரை அவனைக் கொடுக்க முடியாது. ஒன்றுமறியாத இந்தப் பாலகனைக் கொல்வதால் நீங்கள் பெறப்போகும் நன்மை யாது ?

கூட்டத்தார் :—அவனொரு முஸ்லிம் என்பது உங்களுக்குத் தெரியுமா ?

ஜட்ஜ் :—ஆம், தெரியும். ஆனல் என்ன ? அவன் எந்த ஹிந்துவையும் கொல்லவில்லையே. அவன் கொன்றிருக்கிருனா ?

கூட்டத்தார் :—உங்களோடு வாக்குவாதம் செய்ய எங்களுக்கு நேரமில்லை. அவனை எங்களிடம் விட்டுவிடும்.

ஜட்ஜ் :—அது முடியாது. நான் தரமாட்டேன். அவனை என்னுடைய மகனாக ஸ்வீகாரம் செய்து கொண்டு விட்டேன்.

கூட்டத்தார் :—அவனை எங்களிடம் விடுகிறீரா. இல்லையா. எங்களிடம் விடா விட்டால் அநாவசியமாக நீர் உயிர் துறப்பீர்.

ஜட்ஜ் :—எனக்கு அதைப் பற்றி கவலை யில்லை. இஷ்டமானல் என்னைக் கொல்லுங்கள். என்னுடைய உடம்பில் மூச்சு உள்ளவரையில் உங்களைத் தொட விடமாட்டேன்.

கூட்டத்தார் :—அப்படியானல் சரிதான். நீங்கள் இருவரும் சாகவேண்டியது தான்.

அதன்பின் கூட்டத்தார் தந்தையை முதலில் கொன்ருர்கள், அதன் பிறகு மகனைக் கொன்ருர்கள். இருவரையும் கொன்று விட்டு இன்னும் யாரைக் கொல்லலாம் என்று தேடிச் சென்ருர்கள்.

"துன்பப்படுகிறவர்களை அணைத்துக் கொள்வோரே உண்மையான மக்கள். அவர்களிடமே ஆண்டவன் வசித்துக் கொண்டிருக்கிருர்." என்று துக்காராம் பாடி இருப்பது முற்றிலும் உண்மை.

வி. ஜி. டி.

## மரியாதைச் சொற்களும் வகுப்புவாதமும்

கேள்வி :—ரயில்வே ஸ்டேஷன்களில் ஹிந்து ஜலம், ஹிந்து தேனீர் என்றும் இஸ்லாமிய ஜலம், இஸ்லாமிய தேனீர் என்றும் விற்கப்படுவதை காங்கிரஸ் அரசாங்கங்கள் தடுக்க முயல்வதை சந்தோஷமாக வரவேற்கின்றேன். ஆனல் அதே சமயத்தில் ஹிந்துக்களுக்கு ஸ்ரீ, ஸ்ரீமான் என்றும், முசல்மான்களுக்கு ஜனப், சாகிப் என்றும், காந்திஜீயும் அவரை பின்பற்றி காங்கிரஸ்காரர்களும் உபயோகித்து வருவது மரியாதைக்காக உபயோகிக்கப்பட்ட போதிலும் வகுப்புவாத வித்தியாசத்தைக் காட்டுவதாகவும் ஆதரிப்பதாகவும் இருக்கிறதல்லவா ? நாம் எவ்வளவு தூரம் வகுப்புவாதம் வேண்டாம் என்று பேசினபோதிலும் அந்த உணர்ச்சி நம் ஹிருதயத்தைவிட்டு இன்னும் நீங்கவில்லை என்பதை அது காட்டுகிறதல்லவா ?

பதில் :—இது ஒரு நல்ல கேள்வி. எனக்கும் இந்த மாதிரி மரியாதைப் பதங்களை வகுப்புவாத முறையில் உபயோகிப்பது பிடிக்கவில்லை. ஆனல் இப்பொழுது வகுப்புகளுக்குள் நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டிருக்கிறபடியால் மாறுதல் ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலை இன்னும் அமையவில்லை. ஒரு வகுப்பார் கூறும் யோசனை என்பதைக் கொண்டே மற்ற வகுப்பார் நிராகரித்து விடுவார்கள். ஆயினும் இரு வகுப்பாருக்கும் பொதுவாக உள்ள ஒரு பதத்தை யாரேனும் கூறுவாரானல் அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆண்களை எல்லாம் "பாய்" (சகோதரர்) என்றும் பெண்களை சகோதரி என்றும் இரு வகுப்பாரும் உபயோகித்தால் நலமாயிருக்கும் என்று எண்ணுகிறேன். ஆனல் காந்தியடிகள் கூறும் வரை அவருடைய முறையே ஹரிஜன் பத்திரிகையில் அனுஷ்டிக்கப்படும்.

கே. ஜி. எம்.

அச்சடித்தவர் பி. அருணசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை,
பிரசுரித்தவர் : சின்ன அண்ணுமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை